**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**மேட்டூர் நகராட்சி**

நிகழும் ஸ்ரீ சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 15 ம் தேதி ஆங்கில ஆண்டு **01.11.2023**–ம் தேதி **புதன்கிழமை** காலை **11.00** மணிக்கு மேட்டூர் நகர்மன்றத்தில் அவசர கூட்டம் நடைபெற உள்ளதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**நாள் : 26.10.2023**
**இடம்: மேட்டூர் அணை.**

**நகர்மன்ற தலைவர்,**
**மேட்டூர் நகராட்சி.**

**மன்றப்பொருள்**

**1.** கடந்த மாதம் சாதாரண கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு மெயின் ரோட்டில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் தற்காலிகமாக தகரப் பெட்டிக் கடை அனுமதி வழங்கப்பட்டது. அதன் படி தகரப் பெட்டிக் கடை எண்.11 ன் உரிமம் திரு.எம்.தங்கராஜ் என்பவருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேற்படி உரிமதாரருக்கு தற்காலிகமாக வழங்கப்பட்ட இடத்தில், நிரந்தரமாக pucca building அமைத்து நகராட்சி சாலையை ஆக்கிரமித்து கடையை நடத்தி வருகிறார் எனவும், நகராட்சி மேற்கு மெயின் ரோடு சாலைகளில் பல கடைகளின் உரிமதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்து கடையை நடத்தி வருவதாகவும் , எனவே மேற்படி கடைகளை அகற்றக் கோரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு.பொன்ராஜ் என்பவரால் W.P.No.3460/2020 ன்படி வழக்கு தொடரப்பட்டது. மேற்படி தகரப்பெட்டி கடைகளுக்கான உரிமக்காலம் 31.03.2022 உடன் மூன்றாண்டுகள் முடிவடைந்துவிட்டது. மேற்படி விவரத்தை தெரிவித்து நகராட்சியின் சார்பாக, நகராட்சிகளின் நிலையான குழு ஆலோசகர் திரு.லூர்துபால் மௌரியா அவர்களால் எதிர்வாதுரை செய்யப்பட்டது. மேற்படி வழக்கின் மீதான தீர்ப்பு தற்போது வரப்பெற்றுள்ளது. மேற்படி தீர்ப்பின் படி “ **நகராட்சி ஆக்கிரமிப்பு பகுதிகள் நீங்கலாக உள்ள குத்தகை பகுதிகள் குறித்தும் நகராட்சி குத்தகைக்கு விடலாமா என்பது குறித்து முடிவெடுக்க வேண்டும். மேலும் உரிமக்காலத்தை நீட்டிக்கப்படலாம் அல்லது செய்யாவிட்டாலும் நகராட்சியால் நடவடிக்கை எடுக்க முடியும்** ”எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தகரப் பெட்டிக் கடைகளை அகற்றாததால் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் தீர்ப்பின் படி மேற்கு மெயின் ரோட்டில் உள்ள தகரப் பெட்டிக் கடைகள் எண். 11 க்கு வழங்கப்பட்ட உரிமத்திற்கான உத்தரவினை ரத்து செய்ய வருவாய் ஆய்வாளர் (பொ) தனது 07.01.2022 ஆம் தேதிய குறிப்பிலும், மேற்கு மெயின் ரோட்டில் விதிமுறைக்கு மாறாக ஆக்கிரமிப்பு செய்துள்ளதை மன்றத்தில் பொருள் வைத்து மேல்நடவடிக்கை மேற்கொள்ளவும் வருவாய் ஆய்வாளர் (பொ) தனது 13.01.2022 ஆம் தேதிய குறிப்பிலும் தெரிவித்துள்ளார். மேற்படி அவமதிப்பு வழக்கு எண். C.P.Petition No.559/2023 வழக்கின் 24.08.2023 ஆம் தேதிய தீர்ப்பில் மேற்கு மெயின் ரோட்டில் உள்ள தகரப் பெட்டிக் கடைகள் மற்றும் ஆக்கிரமிப்பு கடைகளை உடன் அகற்றிட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவமதிப்பு வழக்கின் தீர்ப்பின் படி மேற்கு மெயின் ரோட்டில் உள்ள தகரப் பெட்டிக் கடைகள் எண்.11 மற்றும் 2, 4, 7, 8, 9, 10, 13, 16, 18, 19, 23, 25 களுக்கு வழங்கப்பட்ட உரிமத்திற்கான உத்தரவினை ரத்து செய்து உத்தரவு வழங்கிடவும், கடைகளை அகற்றிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கடைகளை அகற்றிடக் கோரி வரப்பெற்ற வழக்கின் தீர்ப்பினை நடைமுறைப்படுத்தாததால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை தவிர்க்கும் பொருட்டு மேற்படி கடைகளுக்கு வழங்கப்பட்ட உரிமத்திற்கான உத்தரவினை ரத்து செய்யவும், கடைகளை அகற்றிடவும் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.172/2022/அ2).**

**தீர்மான எண்.415 நாள்.01.11.2023**
**நிராகரிக்கப்பட்டது**

**2.** கடந்த மாதம் சாதாரண கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட **14.65** Sq.Km பரப்பளவில் இரண்டு குடிநீர் நீரேற்று நிலையங்கள், இரண்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், 7 எண்ணிக்கையிலான மேல் நிலை நீர்தேக்க தொட்டிகள், 3 எண்ணிக்கையிலான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், **11** எண்ணிக்கையிலான கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவு நீரேற்று நிலையங்கள், 71 கி.மீ நீள கழிவு நீர் குழாய்கள், **2907** எண்ணிக்கையிலான ஆள் இறங்கும் குழிகள், **159.95** கி.மீ நீளமுள்ள குடிநீர் விநியோக குழாய், **3** எண்ணிக்கையிலான தரைமட்ட நீர்தேக்க தொட்டி, **2830** எண்ணிக்கையிலான தெருவிளக்குகள், **84.001.**கி.மீ நீளமுள்ள நகராட்சி சாலை, **27.30** கி.மீ நீளமுள்ள மழைநீர் வடிகால்கள், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகள் மற்றும் சேகரமாகும் குப்பைகளை

3 எண்ணிக்கையிலான நுண்உயிர் கூடங்களில் பிரித்தெடுக்கும் பணிகள் நகராட்சி எல்லைக்கட்பட்ட பகுதிகளில் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரி வசூல் குறித்த ஆய்வு, நகராட்சிக்கு சொந்தமான 4 ஆரம்ப நிலைப்பள்ளிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு, 28 எண்ணிக்கையிலான சமுதாய மற்றும் 4 எண்ணிக்கையிலான பொதுக்கழிப்பிடங்களின் செயலாக்கம் குறித்து தினசரி ஆய்வு மேற்கொள்ள ஒரு எண்ணிக்கையிலான SCORPIO வாகனம் நகரமன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்கு தேவைப்படுகிறது.

தற்போது ஈப்பு வாகன எண் TN 52 W 4242 (வாகனம் வாங்கப்பட்ட ஆண்டு–2012 வாகனம் இயக்கப்பட்டுள்ள கிலோமீட்டர் 2,53,266) ஆகும். எனவே ஒரு எண்ணிக்கையிலான Mahindra Scorpio Z8 LD MT 2WD 7STR, DGST (Directorate General of supplies Transport) இல் கொள்ளமுதல் செய்ய வாகனம் ஒன்றிற்கு உத்தேசமாக ரூ.18,50,000/– ஆகும். உத்தேச செலவீனத்தில் ஒரு எண்ணிக்கையிலான SCORPIOவாகனம் நகராட்சி பொது நிதியில் இருந்து வாங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி வழங்ககோரி கருத்துரு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1778/2022/இ1)**

**தீர்மான எண்.416 நாள்.01.11.2023**
**பெரும்பான்மையாள நகர்மன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன் அனுமதிக்கப்பட்டது**

3. இந்த மாத கூட்டத்திற்கான புதிய பொருள் மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2ல் குள்ளவீரன்பட்டியில் மீனவர் தெருவில் 150M DI PIPE அமைக்கும் பணி ஆகிய பணிகள் செய்தமைக்கு கீழ் கண்டவாறு 31.08.2023 தேதி ஒப்பந்தபுள்ளி கோரியதில் இரு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | K. கோவிந்தன்,பூசாரிபட்டி ஓமலூார் | (–) 0.10 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | ஸ்ரீ சிவசக்தி விநயாக கன்ஸ்ட்ரக்சன்ஸ் ,மல்லிகுந்தம் | (+) 2.50 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பெறப்பட்ட இரு ஒப்பந்தபுள்ளிகளில் –0.10% மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள K. கோவிந்தன், பூசாரிபட்டி ஓமலூார் நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியைஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1128/2023/இ1)**

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.417 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

4. இந்நகராட்சியில் வார்டு எண்.15 பொன்னகர் பகுதி சர்வே எண்.3/1ல் நகர்புற துணை சுகாதார நிலையம் (UHSC) அமைத்தல் பணி பணிக்கு ரூ.30இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 06.10.2023 தேதியன்று வரப் பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தில் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.கிருத்திகா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 2511656.00 | (+) 0.57% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருவாளர்.கனிஷ்கா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 2639830.00 | (+) 15.70% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | திருவாளர் N.R&CO | 2469315.00 | (–) 1.12% மதிப்பீட்டை விட குறைவு |

**(ந.க.எண். 2568/2023/இ1)**

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.418 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

5. 2022-2023ம் ஆண்டுக்கான தணிக்கைக்கு தலைப்பு வாரியாக ANNUAL ACCOUNTS தயார் செய்ய தனியார் தணிக்கை நிறுவனத்திற்கு தணிக்கை கட்டணம் செலுத்த உத்தேச செலவு தொகை ரூ.150000/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4626 /2022/அ1 )**

**தீர்மான எண்.419 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

6. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின்கீழ் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளை கொண்டு சர்கார்தோட்டம், தூக்கனாம்பட்டி மற்றும் சேலம் கேம்ப் ஆகிய 3 இடங்களில் இயங்கி வரும் (MCC) உரம் தயாரிக்கும் மையங்களில் உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இம்மையங்களில் செயல்பட்டு வரும் இயந்திரங்கள் மற்றும் நகராட்சியில் கொசு புகை மருந்து அடிக்கும் இயந்திரங்களில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை சரி செய்ய 2023-2024ம் ஆண்டிற்கு தேவையான உத்தேச செலவினம் ரூ.50,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

**அலுவலக குறிப்பு**

பொதுசுகாதார அத்தியாவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.35/2017/எச்1)**

**தீர்மான எண்.420 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

7. மேட்டூர் நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்கள் தங்களுக்கு வழங்க வேண்டிய பணப்பயன்களை வழங்க கோரியுள்ளனர். அதன் அடிப்படையில் இந்நகராட்சியில் வழங்கவேண்டிய பணப்பயன்களில் 2020-21 முதல் 2022-23 வரையிலான காலங்களில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு சேமநல நிதி வட்டி தொகை , இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அவர்களிடமிருந்து பெறுவது நிலுவையாக

உள்ளது . மேலும் வட்டி தொகை கணக்கீடு செய்வதற்கு தனியார் நிறுவனம் மூலம் பிரேரணை தயார் செய்ய உத்தேச செலவினம் ரூ 90,000 /– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**( ந. க. எண்:7292/2012/பி2)**

**தீர்மான எண்.421 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

8. இந்நகராட்சிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2023–2024 ஆண்டு நிதியாண்டில் அறிவுசார் மையம் அமைத்தல் பணி தொடங்க உள்ள நிலையில் அவ்விடத்தில் மின்கம்பம் எண்.49யினை பணிக்கு இடையூராக உள்ளதனை அகற்ற கோரி மின்வாரியத்திற்கு கடிதம் அனுப்பட்டத்தில் அம்மின்கம்பத்தினை அகற்ற தமிழ்நாடு மின்சார வாரியம், மேட்டூர் அவர்களிடமிருந்து கேட்பு தொகை ரூ.119180/– கட்டணம் செலுத்த கோரி கடிதம் வரப்பெற்ற நிலையில் கட்டணத்தொகை ரூ.119180/–யினை செலுத்த வேண்டியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1666/2023/இ1 )**

**தீர்மான எண்.422 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

9. மேட்டூர் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12ல் அமைந்துள்ள சதுரங்காடியில் அமைய பெற்ற பொது கழிப்பிடத்தில் உள்ள ஆள்துழை கிணறு உள்ள மின்மோட்டார் பழுதடைந்து உள்ளதாக பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் சங்கம் புகார் தெரிவித்த நிலையில் இருமுறை முயற்சி செய்தும் பழுது சரி செய்ய இயலாததால் புதிதாக ஆழ்துழை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்த ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.1.75/– இலட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதியும் பொது மக்கள் மற்றும் குத்தகை எடுத்தவர்கள் மற்றும் ஊழியர்களின் நலன் கருதியும் செலவினத்தொகையினை பொது நிதி/குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3226/2023/இ1 )**

**தீர்மான எண்.423 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

10. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் 20.10.2023 தேதியின் அறிவுரையின் படி டாக்டர்.கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் 2023 ஜீன் திங்கள் முதல் 2024 ஜீன் திங்கள் வரை நடைபெற உள்ளதனை தொடர்ந்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு செய்ய வேண்டிய பணிகளின் இந்நகராட்சிக்கு சீர்மிகு

வகுப்பறை அமைக்க கல்வி நிதியின் மூலம் பணியினை மேற்கொள்ள குமரன் நகர் துவக்கப்பள்ளியில் அமைக்க ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.9,90,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டிப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேட்டூர் நகராட்சியின் குமரன் நகர் பள்ளியில் மாணவ,மாணவியின் கல்வி வளர்ச்சிக்காக திரு.மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவில் அறிவிப்பினை நிறைவேற்றும் வகையிலும் இத்திட்டத்திற்க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3229/2023/இ1 )**

**தீர்மான எண்.424 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

11. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவின் கீழ் இயங்கி வரும் ஈப்பு வாகனம் எண்.TN–52–V–4660க்கு பழுது நீக்கம் செய்ய விலைப்புள்ளி கோர நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.03.10.2023க்கு இணங்க உள் மற்றும் வெளி பணிமனை உரிமையாளர்களுக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | OM MURUGA MOTOR WORKS KUNJANDIYUR | 122488.00 |
| 2 | அண்ணமலையார் டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | 79260.00 |
| 3 | SKS INDIA PVT LTD SALEM | 180217.00 |

வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளி வ.எண்.2யினை ஏற்று அண்ணாமலையார் டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி பணியினை முடிக்க நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.13.10.2023க்கு மன்றத்தின் பின்னேற்ப்பு வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதியும் நகர்மன்ற தலைவர் முன் அனுமதி வழங்கி பணி முடித்தமைக்கு பொது நிதியிலிருந்து செலவின தொகையினை வழங்கியதற்க்கும் மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்.

**(ந.க.எண்.1786/2023/இ1 )**
**தீர்மான எண்.425 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

**12.** இந்நகராட்சி பொறியியல் பிரிவின் கீழ் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN- 52-W-4242 நகர்மன்ற தலைவர் பயன்படுத்தி வரும் வாகனம் பழுது நீக்கம் செய்ய கோரி ஓட்டுநர்(பொ) கடிதம் வழங்கியுள்ளதனை தொடர்ந்து நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.**14.09.2023** அளித்தற்க்கு இணங்க S.K.S.INDIA.PVT.LTD, சேலம் நிறுவனத்திற்க்கு விலைபுள்ளி கோரப்பட்டத்தில் பழுது நீக்கம் செய்ய தொகை ரூ.**105042**/- வரப்பெற்ற நிலையில் அந்நிறுவனத்திற்க்கு வாகனத்திற்க்கு பணி உத்தரவு

வழங்க நகர்மன்ற தலைவர் முன் அனுமதி நாள்.**28.09.2023** வழங்கியதனை மன்றத்தின் பின்னேற்பு வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி 6உத்திரவு S.K.S.INDIA.PVT.LTD பின்னேற்பு வழங்கலாம்.

   **(ந.க.எண்.3226/2023/இ1 )**

**தீர்மான எண்.426 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

13. மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு 32 எண்ணிக்கை பொது / சமுதாய கழிப்பிடங்கள் உள்ளது. இவற்றை சுத்தம் செய்து பராமரிக்க நகராட்சியில் போதிய தூய்மைப்பணியாளர்கள் இல்லாததால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.11531/2019/எச்1, நாள்:02.12.2021ல் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, 20 எண்ணிக்கை பொது / சமுதாய கழிப்பிடங்களை பொது மக்களிடம் கட்டணம் ஏதும் வசூலிக்காமல் ஓராண்டிற்கு சுத்தம் செய்து பராமரித்து வரவும், அதற்காக மாதம் 1–க்கு கழிப்பிடம் ஒன்றிற்கு சேவைக்கட்டணமாக ரூ.6,000/– அடிப்படையில் **M/s.Shubham Ganga Seva Sansthan, Bangalore** (NGo) என்ற தனியார் நிறுவனத்திற்கு இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.3415/2020/எச்1, நாள்.27.12.2022–ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டு அதன் பணிக்காலம் 30.11.2023 உடன் முடிவடைகிறது. **M/s.Shubham Ganga Seva Sansthan, Bangalore** நிறுவனம் தனது 25.10.2022 ஆம் தேதிய கடிதத்தில், ஏற்கெனவே பராமரித்து வரும் சேவைக்கட்டணத்தின் அடிப்படையில் 20 கழிப்பிடங்களை மேலும் ஓராண்டிற்கு பராமரித்து வர சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். எனவே, பொது மக்களின் பொது சுகாதார நலன் கருதி கீழ்க்கண்ட 20 கழிப்பிடங்களை 01.12.2023 முதல் 30.11.2024 முடிய மேலும் ஓராண்டிற்கு சுத்தம் செய்து பராமரித்து வர **M/s.Shubham Ganga Seva Sansthan, Bangalore** அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கவும், அதற்கான சேவைக்கட்டணமாக மாதம் 1–க்கு கழிப்பிடம் ஒன்றிற்கு ரூ.6,000/– வீதம் 20 கழிப்பிடங்களுக்கு ரூ.1,20,000/– ஐ **M/s.Shubham Ganga Seva Sansthan, Bangalore** அவர்களுக்கு வழங்கவும், இதற்காகும் ஓராண்டிற்கான தோராய செலவினம் ரூ.14,40,000/–ம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பொது / சமுதாய கழிப்பிடம் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | தங்கமாபுரி பட்டினம் மார்க்கெட் | 6 |
| 2 | தங்கமாபுரி பட்டினம் (நியூ பார்ம் கீழ் தெரு) | 7 |
| 3 | பாரதி நகர் | 5 |
| 4 | காமராஜர் நகர் | 9 |
| 5 | காந்தி நகர் | 9 |
| 6 | மாதையன் குட்டை | 30 |
| 7 | ராஜாஜி நகர் | 30 |
| 8 | மீனவர் தெரு | 30 |
| 9 | எலிக்கரடு | 27 |
| 10 | அம்மன் நகர் | 27 |
| 11 | சக்தி நகர் | 26 |
| 12 | காவேரி நகர் | 21 |
| 13 | நேதாஜி நகர் | 15 |
| 14 | பிட்டர்மேன் குடியிருப்பு | 16 |

| | | |
|---|---|---|
| 15 | கூலி லைன் முன்புறம் | 13 |
| 16 | கூலி லைன் பின்புறம் | 13 |
| 17 | தினசரி மார்க்கெட் | 12 |
| 18 | காவலர் குடியிருப்பு | 13 |
| 19 | குமரன் நகர் | 3 |
| 20 | கீழ் குள்ள வீரன் பட்டி | 1 |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3415/2020/எச்1)

**தீர்மான எண்.427 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

**14.** அரசாணை (நிலை) எண். 166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை, நாள் 23.11.2016-ன்படி, அரசு நகராட்சி தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் உள்ள கழிவறை சுத்தம் செய்யும் பணி, பள்ளி வளாகம் முழுவதும் சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும், அதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களால் வருடந்தோறும் நிர்ணயிக்கும் மாவட்ட சந்தை விகிதசாரப்படி, தனியார் துறை ஒப்பந்த அடிப்படையில், பணியாளர்களை பணியில் அமர்த்தி கொள்ளவும், அதற்கான செலவு தொகை மற்றும் மேற்கண்ட அனைத்து துாய்மைபணிகள் மேற்கொள்ள தேவையான தளவாட சாமான்கள், கிருமிநாசினி மருந்துகள் மற்றும் பவுடர்கள் வாங்கி வழங்கவும், அதற்காக ஆகும் செலவின தொகையினை அந்தந்த நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கும் கல்வி வரியின் (Educatuion cess) மூலம் மேற்கொள்ளவும், அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் அறிவுரைகளின்படி, மேட்டூர் நகராட்சிக்கு உட்பட்ட 7 எண்ணிக்கை அரசு/நகராட்சி பள்ளிகளில், பள்ளியின் அனைத்து அறைகளும், கழிப்பறைகள், சிறுநீர் கழிப்பறைகள் மற்றும் பள்ளியின் சுற்றுப்புற வளாக பகுதிகள் முழுவதும் (House Keeping Activites of the School) சுத்தம் செய்ய 12 பணியாளர்களை ஈடுபடுத்தி கொள்ளவும், அதற்காக நபர் 1-க்கு நாள் 1-க்கு ரூ.457/- வீதம், திரு.கே.கோவிந்தன் ஒப்பந்ததாரர் ஓமலூர், என்பவருக்கு 07.02.2023 முதல் 06.08.2023 முடிய ஆறு மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு, மேற்காணும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணிக்கான ஒப்பந்தகாலம் 06.08.2023-ந் தேதியுடன் முடிவடைகின்றது. தற்பொழுது பணிகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரரான திரு. கே.கோவிந்தன் என்பவர் தனது 16.10.2023—ந் தேதிய கடிதத்தில், பணி நீட்டிப்பு செய்து தருமாறும் கேட்டுள்ளார். எனவே, 2019-2020, 2020–2021 மற்றும் 2021–2022-ம் ஆண்டு வழங்கப்பட்ட ஒப்பந்த புள்ளி தொகைக்கும் மற்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் திரு.K.கோவிந்தன், பூசாரிபட்டி, ஓமலூர் அவர்களுக்கு 07.08.2023 முதல் 31.12.2023 முடிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2248/2019/எச்1)**

**தீர்மான எண்.428 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

**15.** மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட **14.65** Sq.Km பரப்பளவில் இரண்டு குடிநீர் நீரேற்று நிலையங்கள், இரண்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், 7 எண்ணிக்கையிலான மேல் நிலை நீர்தேக்க தொட்டிகள், 3 எண்ணிக்கையிலான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், 11 எண்ணிக்கையிலான கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவு நீரேற்று நிலையங்கள், 71 கி.மீ நீள கழிவு நீர் குழாய்கள், 2907 எண்ணிக்கையிலான ஆள் இறங்கும் குழிகள், 159.95 கி.மீ நீளமுள்ள குடிநீர் விநியோக குழாய், 3 எண்ணிக்கையிலான தரைமட்ட நீர்தேக்க தொட்டி, 2830 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள், 84.001.கி.மீ நீளமுள்ள நகராட்சி சாலை, 27.30 கி.மீ நீளமுள்ள மழைநீர் வடிகால்கள், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகள் மற்றும் சேகரமாகும் குப்பைகளை 3 எண்ணிக்கையிலான நுண்உயிர் கூடங்களில் பிரித்தெடுக்கும் பணிகள் நகராட்சி எல்லைக்கட்பட்ட பகுதிகளில் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரி வசூல் குறித்த ஆய்வு, நகராட்சிக்கு சொந்தமான 4 ஆரம்ப நிலைப்பள்ளிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு, 28 எண்ணிக்கையிலான சமுதாய மற்றும் 4 எண்ணிக்கையிலான பொதுக்கழிப்பிடங்களின் செயலாக்கம் மற்றும் சிறப்பு திட்டங்கள், சாலைபணிகள், குடிநீர் பணி மற்றும் பாதாள சாக்கடை திட்ட பணிகள் குறித்து தினசரி ஆய்வு மேற்கொள்ள நகராட்சி பொறியாளருக்கு ஈப்பு வாகனம் இல்லை. இதனால் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகளை ஆய்வு செய்ய இயலாததால், ஒரு புதிய BOLERO ஈப்பு வாகனம் நகராட்சி பொறியாளரின் அவர்களின் பயன்பாட்டிற்கு தேவைப்படுகிறது.

எனவே ஒரு எண்ணிக்கையிலான Mahindra Bolero B6 (O) BS-VI AC (Top Model) , DGST (Directorate General of supplies Transport) இல் கொள்ளமுதல் செய்ய வாகனம் ஒன்றிற்கு உத்தேசமாக ரூ.9,80,000/– ஆகும். உத்தேச செலவீனத்தில் நகராட்சி பொறியாளருக்கு ஒரு BOLERO ஈப்பு வாகனம் பழைய தீர்மான எண்.412 நாள்.27.09.2023ந் தேதிய மன்ற தீர்மானத்தில் குடிநீர் நிதியில் பெற அனுமதிக்கப்பட்ட நிலையில், தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அலுவலக தொலைபேசி செய்தியில் பொது நிதியில் இருந்து ஈப்பு வாகனம் வாங்கி கொள்ள தெரிவிக்கப்பட்டதின்படி இவ்வாகனத்தினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1778/2022/இ1)**

**தீர்மான எண்.429 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

**16.** மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட **14.65** Sq.Km பரப்பளவில் இரண்டு குடிநீர் நீரேற்று நிலையங்கள், இரண்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், 7 எண்ணிக்கையிலான மேல் நிலை நீர்தேக்க தொட்டிகள், 3 எண்ணிக்கையிலான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், 11 எண்ணிக்கையிலான கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவு நீரேற்று நிலையங்கள், 71 கி.மீ நீள கழிவு நீர் குழாய்கள், 2907 எண்ணிக்கையிலான ஆள் இறங்கும் குழிகள், 159.95 கி.மீ நீளமுள்ள குடிநீர் விநியோக குழாய், 3 எண்ணிக்கையிலான தரைமட்ட நீர்தேக்க தொட்டி, 2830 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள், 84.001.கி.மீ நீளமுள்ள நகராட்சி சாலை, 27.30 கி.மீ நீளமுள்ள மழைநீர் வடிகால்கள், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகள் மற்றும் சேகரமாகும் குப்பைகளை 3 எண்ணிக்கையிலான நுண்உயிர் கூடங்களில் பிரித்தெடுக்கும் பணிகள் நகராட்சி எல்லைக்கட்பட்ட பகுதிகளில் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரி வசூல் குறித்த ஆய்வு, நகராட்சிக்கு சொந்தமான 4 ஆரம்ப நிலைப்பள்ளிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு, 28 எண்ணிக்கையிலான சமுதாய மற்றும் 4 எண்ணிக்கையிலான பொதுக்கழிப்பிடங்களின் செயலாக்கம் குறித்து தினசரி ஆய்வு மேற்கொள்ள ஒரு எண்ணிக்கையிலான Mahindra Bolero வாகனம் ஆணையாளர் அவர்களின் பயன்பாட்டிற்கு உள்ளது.

தற்போது ஈப்பு வாகன எண் TN 52 V 4660 (வாகனம் வாங்கப்பட்ட ஆண்டு –2013, வாகனம் இயங்கப்பட்டுள்ள கிலோ மீட்டர் 2,73,820) உள்ளது. ஈப்பு வாகனம் அடிக்கடி பழுதடைந்து பராமரிப்பு செலவு மிக அதிகமாக உள்ளது. மேலும் நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் அலுவலகத்திற்கு பணி நிமித்தமாக அடிக்கடிெ சல்ல வேண்டியுள்ளதால் புதியதாக Mahindra Bolero B6 (O) BS-VI AC (Top Model) , DGST (Directorate General of supplies Transport) இல் கொள்முதல் செய்ய வாகனம் ஒன்றிற்கு உத்தேசமாக

ரூ.9,80,000/– ஆகும். உத்தேச செலவீனத்தில் ஒரு எண்ணிக்கையிலான Mahindra Bolero பழைய தீர்மான எண்.413 நாள்.27.09.2023ந் தேதிய மன்ற தீர்மானத்தில் குடிநீர் நிதியில் பெற அனுமதிக்கப்பட்ட நிலையில், தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அலுவலக தொலைபேசி செய்தியில் பொது நிதியில் இருந்து ஈப்பு வாகனம் வாங்கி கொள்ள தெரிவிக்கப்பட்டதின்படி இவ்வாகனத்தினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1778/2022/இ1)**

**தீர்மான எண்.430 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

17. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் கீழ் வரப்பெற்ற விண்ணப்பத்தில் மேட்டூர் நகராட்சியில் வார்டு எண் 18ல் தூக்கணாம்பட்டி பகுதியில் வார்டு–B, பிளாக்ல் அமைப்பற்ற இடத்தில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட வணிக வளாகம் கட்ட திட்ட மதிப்பீடு ரூ.1200.00இலட்சம் மதிப்பீட்டில் திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி புதிய வணிக வளாகம் கட்ட இந்நகராட்சியில் போதிய நிதி இல்லாததனால் அரசிடம் முழு மானியம் பெற்று வணிக வளாகம் கட்டிகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 3154/2023/இ1)**

**தீர்மான எண்.431 நாள்.01.11.2023**
**அனுமதிக்கப்பட்டது**

**மேற்படி புதிய வணிக வளாகம் கட்டிடம் ஒரே இடத்தில் கட்டாமல் பேருந்து நிலையம் அருகில், நான்கு ரோடு, தூக்கணாம்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலகம் எதிர்புறம் ஆகிய மூன்று பகுதிகளில் தலா ஒரு வணிக வளாகம் கட்டிடம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நிர்வாக அனுமதி பெறவும் மேலும் இந்நகராட்சியில் போதிய நிதி இல்லாததால் அரசிடம் முழுமானியம் பெற்று வணிக வளாகம் கட்டிடம் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.**

ஆணையாளர்
மேட்டூர் நகராட்சி